**<u>பொங்கலோ பொங்கல் – 13.01.2024</u>**

பள்ளி வாயிலில் குச்சில் அமைத்து, தோரணம் கட்டி, அதிகாலையில் கோலமிட்டு, பரத்தி வைத்த வாழையிலையில் பழங்கள், காய்கறிகள் படைத்துப் பகலவனின் பார்வை பட மஞ்சள் கட்டிய புதுப்பானையில் புத்தரிசியிட்டு, பொங்கலோடு மகிழ்ச்சியும் பொங்கிவர 'பொங்கலோ பொங்கல்' என மங்கலயொலி எழுப்பி, எல்லாம் வல்ல இயற்கையை நன்றியோடு வணங்கி நின்றது புஷ்பலதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி.

கோலாகலமாகக் கொண்டாடப்பட்டப் பொங்கல் விழாவில் இடம்பெற்றிருந்த மாணவர்களின் கரகாட்டம், ஒயிலாட்டம், கிராமிய நடனம், 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நாடகம், அறுவடைத் திருநாள் பற்றிய மாணவர்களின் சொற்பொழிவு ஆகியவை காண்பவரின் கருத்துக்கும் கலையுணர்வுக்கும் விருந்தாய் அமைந்தது. தொடர்ந்து மாணவ, மாணவியருக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. முன்னதாக, மாணவர்கள் பொங்கல் விழாவை ஓவியமாக வரைந்தும், வாழ்த்து அட்டை தயாரித்தும், கவிதை புனைந்தும் வகுப்பறையில் கொண்டாடினர்.